அ.ஆ.எண்: 480/2025
ந.க.எண்: அ3/10150/2025
நாள்: 29.08.2025

தளவாய் அலுவலகம்,
த.சி.கா. 4–ஆம் அணி,
கோவைப்புதூர், கோவை – 42.

<u>இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி – ஆணையிடுதல்</u>

கோவை மாவட்ட காவலில் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது கடந்த 15.04.1994 அன்று மறைந்த காவலர் 217 திரு. ந. கோபாலன் குட்டி என்பவரது மகன் திரு.ம.த.பிரசோப் என்பவருக்கு, காவல்துறை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை அலுவலகக் குறிப்பாணை ந.க.எண். 1433/ CA 1 /2005, நாள்: 25.05.2006 – இன்படி கருணை அடிப்படையில் கணிணி விபரப் பதிவாளராக நீலகிரி மாவட்ட காவல் அலுவலகத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் 26.09.2006 மு.ப பணிநியமனம் செய்யப்பட்டார். அரசாணை (நிலை) எண். 220, உள் (காவல்.15) துறை, நாள்: 18.02.2016 மற்றும் காவல் கண்காணிப்பாளர், நீலகிரி மாவட்ட அலுவலக ஆணை எண்.433/2016, ந.க.எண். அ3/4674/2016, நாள்: 17.03.2016– ன்படி அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 01.05.2007 மு.ப முதல் கணினி விபர பதிவாளர் தரத்தில் தற்காலிக பணியினை வரன்முறை செய்யப்பட்டது. பின்னர் காவல் கண்காணிப்பாளர், நீலகிரி மாவட்ட அலுவலக ஆணை எண்.447/2016, ந.க.எண். M1/5697/2016, நாள்: 18.03.2016 – ன்படி அவரது தகுதிகாண் பருவம் கணினி விபர பதிவாளர் தரத்தில் 30.04.2009 பிற்பகலில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2) காவல்துறை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை அலுவலகக் குறிப்பாணை ந.க.எண். 3756001/NGB 2 (2)/2022–8, நாள் 02.05.2023– இன்படி மேற்காணும் கணிணி விவரப் பதிவாளர் பணியினை இளநிலை உதவியாளராக பணி மாற்றம் செய்யப்பட்டு (By transfer of service), கடந்த 11.05.2023 முற்பகலில் த.சி.கா 4 ஆம் அணி தளவாய் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்.

---2

3) காவல்துறை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை அலுவலக சுற்றுக் குறிப்பாணை ந.க.எண். 2528450/CAR-1/2022, நாள்: 03.12.2022 மூலம் பெறப்பட்ட அரசுக் கடித எண். 7819/காவல்-15/2022-2, நாள்: 21.11.2022-ல், காவல்துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட கணிணி விவரப் பதிவாளர்களின் முதுநிலை அடிப்படையில் தட்டச்சர்/ இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட தனியர்களுக்கு விதித் தளர்வு தேவைப்படாத நேர்வுகளில் பணிவரன்முறை செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில், மேற்குறிப்பிட்டுள்ள இளநிலை உதவியாளர் திரு.ம.த.பிரசோப் என்பவரது தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை, அவரை கணிணி விவரப் பதிவாளர் பணியிலிருந்து இளநிலை உதவியாளராக பணி மாற்றம் செய்யப்பட்ட (By transfer of service), நாளான 11.05.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ஓம்/- த.செந்தில்குமார்,
தளவாய்,
த.சி.கா. 4-ஆம் அணி,
கோவைப்புதூர், கோவை-42.

பெறுநர்
திரு.ம.த.பிரசோப்,
இளநிலை உதவியாளர்,
த.சி.கா. 4-ஆம் அணி.

நகல் : காவல்துறை தலைமை இயக்குநர், தலைமை காவல் படை, தமிழ்நாடு, சென்னை.
நகல் : அ3, பி1, பி2 இருக்கை, த.சி.கா. 4-ஆம் அணி, கோவைப்புதூர்-42.
நகல் : அணி ஆணை புத்தகம்.

// உ.ந.உ.ப.அ //

நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
த.சி.கா. 4-ஆம் அணி,
கோவைப்புதூர், கோவை-42.